RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2169

OPEN ACCESS

# கபிலர் பாடல்களில் எண்வகை வனப்பு

மா. கார்த்திகேயன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா.

# Eight Forestation form in Kabilar songs

M. Karthikeyan [a, *]

[a] Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore-641014, Tamil Nadu, India

* Corresponding Author: mkarthikeyantamilpsg@gmail.com

Received: 13-08-2022
Revised: 20-10-2022
Accepted: 27-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

The oldest grammar book Tolkappiyam is the reason for the emergence of many literary forms. Like Tolkappiyam, Sangam period literary works were written focusing on the life of the ancient Tamil people and the songs of those era is about both the internal and external life. Sangam literary books are collections of songs sung by many poets of different eras. Kabilar is notable among those Sangam literary poets. Kapila's songs are written in praise of the mountainous land of Kurinji. Kabilar's songs are beautiful and interesting. His songs are classified into eight forestation form. Tolkappiyam says that description about forests add beauty to poetry. This article is intended to reveal the eight forestation form in poet kabilar's songs.

**Keywords:** Kabilar, Eight Forestation, Sangam, External Life

## முன்னுரை

மொழியின் அமைப்பினைக் கூறும் இலக்கண நூல்களுள் பழமையானதாகிய தொல்காப்பியம், தமிழ் இலக்கிய ஆக்கம் குறித்த சிந்தனைகளை எடுத்துரைக்கின்றது. செய்யுள் இயற்றுவதற்கான அடிப்படை உறுப்புகளாகச் செய்யுளியல் முப்பத்துநான்கு உறுப்புகளைக் குறிப்பிடுகின்றது. இலக்கியங்களில் காலத்திற்கேற்ற புதுமைகளைப் புகுத்தி, செறிவான கருத்தியல்களை அமைக்க இச்செய்யுள் உறுப்புகள் துணை செய்கின்றன. தொல்காப்பியம் கூறும் உறுப்புகள் பலவும் சங்கப் புலவர்கள் இயற்றிய சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. அதில் குறிஞ்சித் திணைப் பாடுவதில் வல்லவரான கபிலரது பாடல்களில் தொல்காப்பியம் கூறும் எண்வகை வனப்புகள் அமைந்துள்ள தன்மையினை ஆராய்ந்துரைப்பதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகிறது.

## வனப்பு

மொழிக்கும் யாப்பிற்கும் உள்ள தொடர்பைச் செய்யுள் என்ற சொல்லால் தொல்காப்பியம் இணைத்துக் கூறுகின்றது. தமிழ்மொழியில் உள்ள இலக்கியங்களில் பெரும்பாலும் அகக்கருவிகளை இணைத்தே ஓர் இலக்கியத்தின் திணைப் பாடப்படுகிறது. அந்த வகையில் ஓர் இலக்கியத்தின் படைப்புக் கருவியாக அமைவது வனப்பு ஆகும். வனப்பு உறுப்புக்கள் ஒரு செய்யுளின் அக உறுப்பின் இலக்கணத்தைப் பேசும் நிலையில் அமைகின்றன. இவ்வனப்பு என்னும் சொல் அழகு, அணி, அலங்காரம், எழில், சாயல், கவின், பொலிவு என்ற பல பொருள் தழுவியதாக உள்ளது.

இவ்வனப்பின் இலக்கணத்தைத் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை. வனப்பின் இலக்கணத்தைத் தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர் உரைக்கையில், "வனப்பென்பது, பெரும்பான்மையும் பல உறுப்புந்திரண்டவழிப் பெறுவதோர் அழகாகலின் அவ்வாறு கோடும். அதனாற் பல செய்யுளும் உறுப்பாய்த்திரண்டு பெருகிய தொடர்நிலையதே வனப்பென்னும் பெயர்ப்பகுதி வகையான் ஏற்பதென்பது. அஃதேல், இவ்வெட்டுந் தனிவருஞ் செய்யுட்கண் வந்தால் அழகு செய்யாவோ வெனின், அவைபோல் இவை செய்யுட்குமாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார் (Ilampurananr, 2005).

## எண்வகை வனப்புகள்

சங்க இலக்கியத்தில் 'வனப்பு' என்ற சொல்லானது 'அழகு' என்னும் பொருளைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. இதற்கு,

"வனப்பு"

"வனப்போடு"

"காமர் வனப்பினள்"

"வனப்பின்"

எனவரும் பாடலடிகள் சான்றாகும் (Duraisamipillai, 1957; Nachinarkiniyar, 1980; Swaminatha Iyer, 1978). அம்மை முதலாக இழைபு ஈறாக அமைந்துள்ள எண்வகை உறுப்புகளும் செய்யுளில் அமைந்துள்ள சீர், பொருள் மற்றும் அடி அழகுகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளதால் வனப்பு என்று அழைக்கப்படுகிறது. பல செய்யுள்களின் உறுப்பாய்த் திரண்டு பெருகியத் தொடர்நிலை அமைப்பாய் வருகின்ற வனப்பின் வகைப்பாட்டைத் தொல்காப்பியம் எட்டு எனப் பகுத்துள்ளது. இதனை,

"அம்மை அழகு தொன்மை தோலே

விருந்தே இயைபே புலனே இழைபெனாஅப்

பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ

நல்லிசைப் புலவர் செய்யுளு றுப்பென

வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே"

என்ற நூற்பாவானது எடுத்துரைக்கின்றது (Ilampurananr, 2005). இவ்வெண்வகை வனப்பினையும் நான்கு வகையாகப் பகுத்துரைக்கின்றனர். அவைவருமாறு,

1. **பாட்டின் அடி எண்ணிக்கை சார்ந்து வருபவை,**

அம்மை - குறைந்த அடிகள் வருதல்

தோல் - மிகுந்த அடிகள் வருதல்

2. **பாட்டின் சொற்கள் சார்ந்து வருபவை,**

அம்மை - மென்மொழி வருதல்

அழகு - செய்யுள் மொழி வருதல்

தோல் - இழுமென் மொழி வருதல்

புலன் - பேச்சு மொழி வருதல்

3. **பாட்டின் அழகு சார்ந்து வருபவை,**

புலன் - எளிமை, தெளிவுடன் வருதல்

இயைபு - வல்லொற்றுப் புணர்தல் குறளடி, சிந்தடி, அளவடி,

நெடிலடி, கழிநெடிலடி வருதல்

இழைபு - வல்லெழுத்து வாராத ஒற்றுடன் கூடி குறளடி முதல்

கழிநெடிலடி வருதல்

4. **பாட்டின் உட்பொருள், வடிவம் சார்ந்து வருபவை,**

தொன்மை - பழமையான கதைகள் வருதல்

விருந்து - புதிய பாடுபொருள் வருதல்

இந்நான்கு வகையால் பகுத்துரைக்கப்படும் வனப்புறுப்புக்களின் இலக்கணங்கள் செய்யுளின் அழகியல் நிலையைச் சார்ந்ததாகவே அமைகின்றன.

## அம்மை

வனப்பு எட்டினுள் 'அம்மை' என்ற உறுப்பே முதலில் சுட்டப்பட்டுள்ளது. அம்மை என்ற சொல் 'அமைதிப்பட்டு நிற்றல்' என்னும் பொருளையுடைய குணப் பெயராகும். இந்த அம்மை உறுப்பு சின்மொழியாட்சி (சிறிய சொற்கள், மென்மொழி யாட்சி (மெல்லிய சொற்கள்), அடிநிமிர் வின்மை என்ற இயல்புகளைக் கொண்டதாகும். இதனை,

"சின்மென் மொழியால் தாய பனுவலின்

அம்மை தானே அடிநிமிர் வின்றே" (Ilampurananr, 2005)

என்ற நூற்பாவால் அறியலாம். மெல்லிய சொற்களாலும் குறைந்த அடிகளாலும் பாடப்படும் அம்மை என்னும் இலக்கிய வகைக்குச் சான்றாக,

"நல்லவும் தீயவும் அல்லகுவி இணர்ப்

புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை

கடவுள் பேணேம் என்னா ஆங்கு

மடவர் மெல்லியர் செல்லினும்

கடவன் பாரிகை வண்ணமையே" (Duraisamipillai, 1970)

என்ற பாடலானது அமைகின்றது. இப்பாடல் நாற்சீர்க் கொண்ட நிலைமண்டில ஆசிரியமாக அமைந்துள்ளது. இதில் நல்லவும், தீயவும், எருக்கம், கடவுள், மடவார், மெல்லியர் போன்ற எளிமையான சொற்களால் அமைத்தும், அம்மை எனும் வனப்பிற்கேற்பக் கபிலர் இப்பாடலை இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தோழி, செவிலியிடத்துத் தலைவன் தலைவியின் காதலைக் கூறி அறத்தொடு நிற்பதாகப் பாடப்பட்ட ஐங்குறுநூற்றுப் பாடலில் அம்மை எனும் வனப்பினை அமைத்துப் பாடியுள்ளார் கபிலர். இதை,

"அன்னாய் வாழி! வேண்டு அன்னை! கானவர்

கிழங்கு அகழ் நெடுங்குழி மல்க வேங்கைப்

பொன்மலி புதுவீ தாஅம் அவர்நாட்டு

மணிநிற மால்வரை மறைதொறு, இவள்

அறைமலர் நெடுங்கண் ஆர்ந்தன பனியே" (Duraisamipillai, 1957)

என்ற பாடலின் மூலம் அறியலாம். இப்பாடலில் அன்னை, கானவர், கிழங்கு, வேங்கை, மால்வரை, நெடுங்கண் போன்ற எளிமையான சொற்கள் அமைந்துள்ளதால் அம்மை என்னும் வனப்பிற்குரியதாக அமைந்துள்ளது.

## அழகு

செய்யுளுக்குரிய சொற்களால் சீர்புனைந்து பாடப்படும் இலக்கிய வகை அழகு ஆகும். இதனைத் தொல்காப்பியம்,

"செய்யுள் மொழியால் சீர்புனைந்து யாப்பின்

அவ்வகை தானே அழகு எனப்படுமே" (Ilampurananr, 2005)

என்ற நூற்பாவில் எடுத்தியம்புகிறது. உள்ளத்தை ஈர்க்கும் இயல்புடையதாய் செய்யுள்களுக்கு அழகியலை மிகுவிக்கும் உறுப்பாக அழகானது திகழ்கின்றது. கபிலரின் பல பாடல்கள் அழகியல் மிளிரும் வகையில் அமையப் பெற்றுள்ளன. அழகு என்ற வனப்புக்குச் சான்றாக,

"பெயல்கால் மறைத்தலின் விசும்பு காணலரே

நீர்பரந்து ஒழுகலின் நிலம் காணலரே

எல்லை சேறலின் இருள்பெரிது பட்டன்று

பல்லோர் துஞ்சும் பானாள் கங்குல்

யாங்கு வந்தனையோ? ஓங்கல் வெற்ப!

வேங்கை கமழும் எம்சிறுமுடி

யாங்கு அறிந்தனையோ? நோகோ யானே?" (Swaminatha Iyer, 1978)

என்ற பாடலானது அமைகிறது. இப்பாடலில் செய்யுளுக்குரிய சொற்களான பெயல், விசும்பு, துஞ்சுதல், கங்குல், வெற்பு போன்றவை அமைந்து செய்யுளின் அழகினை மிகுதிப்படுத்துகின்றன.

பறம்பு மலையில் மழைப் பொழிந்தாலும் பொழியாவிடினும் பாரியைத் தன்னை நாடி வரும் இரவலர்க்கு வரையாது கொடுக்கும் தன்மையினைக் கொண்டவன் என விறலியை ஆற்றுப்படுத்தும் பாடலில் அழகு எனும் வனப்பினைக் கபிலர் அமைத்துப் பாடியுள்ளார். அப்பாடலில் செய்யுளுக்கு அழகூட்டும் சொற்களாகச் சேயிழை, நுதல், புலத்துழை, நெடுவரை, சாயல் போன்றவைப் பயின்று வந்துள்ளன. சான்றாக,

"சேயிழை பெறுகுவை - வாள் நுதல் விறலி

தடவுவாய்க் கலித்த மாஇதழ்க் குவளை

வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்

பெய்யினும் பெய்யாதாயினும் அருவி

கொள்உழு வியல்புலத் துழைகால் ஆக

மால்புடை நெடுவரைக் கோடுதோறு இழிதரும்

நீரினும் இனிய சாயற்

பாரி வேள்பால் பாடினை செலினே" (Duraisamipillai, 1970)

என்ற பாடலானது அமைகிறது.

## தொன்மை

தொன்மை என்னும் சொல் பழமை என்ற பொருளைத் தருகிறது. பழமையான மரபுகளையும், தொன்மக்கதைகளை எடுத்துரைக்கும் வகையில் செய்யுளில் இடம்பெறுவது தொன்மை எனும் வனப்பாகும். இதனை,

"தொன்மை தானே

உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே" (Ilampurananr, 2005)

என்ற நூற்பா எடுத்துரைக்கிறது. இத்தொன்மை எனும் வனப்பிற்குச் சான்றாகக் கலித்தொகையில் கபிலர் இயற்றிய,

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்

உமைஅமர்ந்து உயர்மலை இருந்தனனாக

ஐஇரு தலையின் அரக்கர் கோமான்

தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுந்து அம்மலை

எடுக்கல் செல்லாது உழப்பவன் போல" (Nachinarkiniyar, 1980)

என்ற பாடல் அமைகிறது. இப்பாடலில் இமய மலையை வில்லாக வளைத்த வரும், கங்கையைத் தலையில் சூடியவருமான சிவபெருமான் உமையம்மையோடு கயிலையில் வீற்றிருக்கின்றார். அப்போது, அரக்க வேந்தனாகிய பத்துத் தலையினை உடைய இராவணன், தனது ஆணவத்தால் அம்மலையினைப் பெயர்க்க முற்பட்டுக் கைகளை இழந்தான் என்ற சிவபெருமான் குறித்த தொன்மக்கதை இடம்பெற்றுள்ளது. இறைவனுடைய பழமையான தொன்மக்கதையை எடுத்துரைப்பதால் இப்பாடல் தொன்மம் எனும் வனப்பிற்குச் சான்றாக அமைகின்றது.

## தோல்

இழுமென்னும் இன்னோசைப் பொருந்திய சொல்லமைப்பினால் அமைவது இழுமென் மொழியாகும். இழுமென்னும் இசை தழுவிய மென்மைமிக்க இனிய சொற்களால் விழுமியப் பொருளை எடுத்துக் கூறுவதும், மிகுதியான சொற்களால் பல அடிகளைக் கொண்டு இயற்றப்படுவதும் தோல் எனும் வனப்பு ஆகும். இதனை,

"இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்

பரந்த மொழியால் அடிநிமிர்ந்து ஒழுகினும்

தோல் எனமொழிப தொன்னெறிப் புலவர்" (Ilampurananr, 2005)

என்ற நூற்பா உணர்த்துகிறது. இத்தோல் எனும் வனப்பு கபிலர் பாடலிலும் அமையப் பெற்றுள்ளது.

முத்தாலும் மாணிக்கத்தாலும் பொன்னாலும் பூணுதற்கேற்ப அழகுற முறைப்படி செய்த அணிகலன்கள் அழகு குன்றின், அவற்றின் துணைக்கொண்ட அதைச் சீர்செய்ய இயலும். ஆனால், சான்றாண்மை, பெருமை, ஒழுக்கம் போன்ற பண்புகள் சீர்குலைந்தால் அதை நீக்கி முன்பு இருந்த பழைய நிலைக்குக் கொண்டு வருதல் என்பது சான்றோர்க்கும் எளிதான செயல் இல்லை. என் திருமணமானது பெற்றோர் விருப்பம் மற்றும் எனது நாணம் ஆகிய இரண்டும் ஒருசேர நீங்கிப் போகவும், நெடுந்தேரினை உடைய எனது தந்தையின் அரிய காவலைக் கடந்தும் நிகழ்ந்தது. இவ்வாறு நிகழ்ந்த மணத்தைப் பெற்றோர்க்கு அறிவுறுத்தினாய் ஏதேனும் குற்றம் உண்டா? இந்நிலையை எடுத்துக் கூறிய பிறகும் ஏற்றுக் கொள்ளவில்லையெனில் நான்பொறுத்திருப்பேன், இந்தப் பிறவியில் இல்லையென்றாலும் அடுத்த பிறவியில் இணைந்து கொள்வோம் எனத் தலைவி வருந்துவதாகத் தோழி தலைவியின் தாயிடம் கூறுகின்றாள். இதனை,

"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வரும் குரைய கலம்கெடின் புணரும்
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇவயங்கு புகழ்நிறுத்தல்
ஆசுஅறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார் தொல்மருங்கு அறிஞர்
மாதரும் மடனும் ஓராங்குத் தணப்ப
நெடுந்தேர் எந்தை அழுங்கடி நீவி
ஞாம் அறிவுறாலின் பழியும் உண்டோ?
ஆற்றின் வாரார் ஆயினும் ஆற்ற
ஏனை உலகத்தும் இயைவதால் நமக்குஎன
மான்அமர் நோக்கம் கலங்கிக் கையற்று
ஆனாச் சிறுமையள் இவளும் தேம்பும்" (Subramaniyam, 2010)

எனக் கபிலர் எடுத்துரைக்கின்றார். இப்பாடலடிகள் உயர்ந்த விழுமிய ஒழுக்க நிலையினை உணர்த்துவதாலும், அதிகமான சொற்களைக் கொண்டு விளங்குவதாலும் தோல் வனப்பின் இலக்கணத்தைப் பெற்றுத் திகழ்கின்றன.

## விருந்து

விருந்து என்னும் பதம் புதுமை என்ற பொருளைத் தருகிறது. யாப்பு வடிவமும் பொருளும் முன்பு இருந்ததை விட புதியதாகப் படைத்துப் பாடும் இலக்கிய வகை விருந்து ஆகும். இதனை,

"விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே" (Ilampurananr, 2005)

எனும் நூற்பா நவில்கிறது. புதுமைக்கு அடிக்கோலுவதாகக் குறுந்தொகையில் கபிலர் பாடிய,

"வேரல்வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!
யார்அஃது அறிந்திசினோரே? - சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்குஇவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" (குறுந் - 18)

எனத் தொடங்கும் பாடல் அமைகிறது. தொல்காப்பியம் கூறும் இலக்கணத்தின்படி அகப்பொருளைக் கலிப்பா அல்லது பரிபாட்டில் பாடவேண்டும். மேலும், ஆசிரியப்பாவின் ஈற்றயலடி முச்சீராக இருக்கவேண்டும். இவ்விரு மரபுகளையும் மீறி இப்பாடல் நிலைமண்டில அமைப்பில் சங்க காலத்தில் விருந்துச் செய்யுளாக இடம்பெறுகிறது. ஏனெனில், தொல்காப்பியம் மண்டிலம் என உரைத்ததைத் தான் பிற்கால யாப்பியல் ஆசிரியர்கள் நிலைமண்டிலமாகப் பகுத்துப் பாடுகின்றனர்.

## இயைபு

ங, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு மெய்களை இறுதியாகக் கொண்டு முடியும்படி பாடுவது இயைபு ஆகும். இதனை,

“ஞகார முதலா னகார ஈற்றுப்

புள்ளி இறுதி இயைபு எனப்படுமே” (தொல். பொருள்.செய்.நூற்-541)

என்ற நூற்பாவானது உணர்த்துகிறது.

ஐங்குறுநூற்றில், அன்னாய்ப்பத்து என்னும் தலைப்பில் பத்துப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அன்னாய்ப்பத்து என்பது ‘அன்னாய்’ என்ற விளிச்சொல் செய்யுள் தோறும் இறுதியாக வருமாறு பாடப்பட்ட பத்துப்பாடல்களின் தொகுதி ஆகும். அன்னாய்ப்பத்தில் அமைந்த பத்துப்பாடல்களின் இறுதி அடிகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

“செயலையாம் பகைத்தழை வாடும் அன்னாய்!”

“அறவற்கு எவனோ, நாம் அகல்பு அன்னாய்!”

“யானுயிர் வாழ்தல் கூடும் அன்னாய்!”

“சீருடைநல் நாட்டுச் செல்லும் - அன்னாய்!”

“அதனினும் கொடிய செய்குவர் அன்னாய்!”

“மெய்பிறிது ஆதல் எவன்கொல்? அன்னாய்!”

“மேனி பசப்பது எவன்கொல்? அன்னாய்!”

“பெருங்கல் நாடன் வருங்கொல்? அன்னாய்!”

“ஒன்றுதல் பசப்பது எவன்கொல்? அன்னாய்!”

“மயங்குஇதழ் மழைக்கண் கலிழும் அன்னாய்!”

மேற்கண்ட பத்துப் பாடல்களின் ஈற்றடியின் இறுதிச்சொல் அன்னாய் என முடிந்துள்ளது. அதாவது யகர மெய்யினை இறுதி எழுத்தாகக் கொண்டு அமைந்திருப்பதால் இயைபு என்னும் வனப்பிற்குச் சான்றாக அமைகின்றன (Duraisamipillai, 1957).

## புலன்

புலன் என்பதற்குக் கருத்தின் புலப்பாடு என்று பொருள். வட்டார வழக்குச் செறிந்த கூத்திலக்கியங்கள் புலன் என்னும் வனப்பிற்குச் சான்றுகளாக அமைகின்றன. பேச்சு வழக்குச் சொற்களின்படி அமைத்துப் பாடுவது புலன் எனும் வனப்பாகும். இதனை,

“சேரி மொழியால் செவ்விதின் கிளந்த

தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்

புலன் என மொழிப புலனுணர்ந் தோரே” (Ilampurananr, 2005)

என்ற நூற்பாவால் உணரலாம். பேச்சு வழக்கில் அமைந்த பாடல்கள் கபிலர் இயற்றிய சில பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன. இதற்கு,

“ஒருசார் அருவி ஆர்ப்ப ஒருசார்

பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்

வாக்க உக்க தேக்கள் தேறல்

கல்அலைத்து ஒழுகும் மன்னே பல்வேல்

அண்ணல் யானை வேந்தர்க்கு

இன்னான் ஆகிய இனியோன் குன்றே”

என்ற பாடல் சான்றாக அமைகின்றது. இதில் புலன் எனும் வனப்பிற்கேற்ப சில வகைச் சொற்கள் பேச்சு வழக்கில் இடம்பெற்றுள்ளன.

## இழைபு

ஒற்றுடன் கூடிய வல்லெழுத்து வராமல் குறளடி முதலாகக் கழிநெடிலடி ஈறாக வரும் ஐந்தடியையும் நாற்சீரடியுடன் ஒப்புமைப்படச் செய்து ஓங்கிய இசைக்குரிய சொற்களால் பாடப்படுவது இழைபு ஆகும். இதனைத் தொல்காப்பியம்,

"ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து அடங்காது

குறளடி முதலா ஐந்துஅடி ஒப்பித்து

ஓங்கிய மொழியால் ஆங்குஅவன் மொழியின்

இழைபின் இலக்கணம் இயைந்தது ஆகும்"

எனும் நூற்பாவில் விளக்குகிறது. இழைபு வனப்பினைக் கபிலர் இயற்றிய குறிஞ்சிக்கலியின் பல பாடல்களில் காணமுடிகிறது. குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்ற ஐவகை அடிகளின் இலக்கணத்தில் வல்லொற்று மிகாது கபிலர் பாடிய பாடலுக்குச் சான்றாக,

"வாங்குகோல் நெல்லொடு வாங்கி வருவைகல்"

"வதுவை அயர்தல் வேண்டுவல் ஆங்கு"

"நெய்பெய் தீயின் எதிர்கொண்டு"

"மலையன் மாஊர்ந்து போகி, புலையன்"

"அலங்கும் பாண்டில் இழை அணிந்து ஈம் என"

"பெருங்கல் நாடன் வரும்கொல்? அன்னாய்!"

"பெயல் ஆன்று அவிந்த தூங்குஇருள் நடுநாள்"

எனத் தொடங்கும் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலடிகளில் வல்லொற்று மிகாது இழைபு வனப்பிற்கேற்ப சொற்கள் அமைந்திருக்கின்றன.

## முடிவுரை

செய்யுளின் அழகை மிகுவிப்பதாக அமைபவை எண்வகை வனப்புகள் ஆகும். அவற்றிற்குரிய தனித்த இலக்கணத்தைத் தொல்காப்பியம் கூறாது அதன் வகைப்பாட்டை மட்டுமே விரித்துக் கூறியுள்ளது. தொல்காப்பியம் குறிப்பிடும் எண்வகை வனப்பிற்குரிய களன்களும் கபிலரின் பாடல்களில் பொருந்தியுள்ளன. அவற்றுள், அம்மை எனும் வனப்பு எளிமையான சொற்கள் அமையப் பாடப்படுவதாகும். தம் மனக்கருத்தைப் பிறருக்கு எளிதில் உணர்த்த அம்மை எனும் வனப்பு உதவுகிறது. கபிலரின் பல பாடல்களில் இவ்வனப்பு இடம்பெற்றுள்ளதைச் சான்றுகள் விளக்குகின்றன. பேச்சு வழக்கில் அமையும் புலன் எனும் வனப்பும், மெய்யொற்றுப் பதினொன்றில் ஒன்றினை மட்டும் பெற்று முடியும் இயைபு வனப்பும், ஒற்றுடன் கூடிய வல்லொற்று வாராது பாடும் இழைபு வனப்பும் அமைய கபிலர் இயற்றிய பல பாடல்கள் தொல்காப்பிய வனப்பிலக்கணத்தைத் தழுவிநிற்கின்றன. மரபுவழி வந்த பழமையான கதைகளைக் கூறும் தொன்மை, விழுமிய பொருள்களைப் பாங்குற எடுத்துரைக்கும் தோல் முதலிய வனப்புகளும் கபிலர் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. இவையாவும் மரபிலக்கண நோக்கில் இயற்றப்படும் செய்யுள்களின் அழகை உயர்வுபடுத்திக் காட்டுவதற்காக இலக்கியங்களில் எடுத்தாளப்படுகின்றன என்பது இவ்வாய்வின்வழி புலப்படுகிறது.

## References

Duraisamipillai, A.S. (1957) Ainkurunooru, Annamali University, Sithambaram, India

Duraisamipillai, A.S. (1970) Purananooru, Kalaga veliyedu, Chennai, India

Duraisamipillai, A.S. (1973) Pathitrupathu, Kalaga veliyedu, Chennai, India

Ilampurananr, (2005) Tholkapiyam Porulahikaram, Saratha Pathippagam, Chennai, India

Nachinarkiniyar, (1980) Kalithogai, U.Ve.Sa Noolagam, Chennai, India

Subramaniyam, S.V. (2010) Sanga Ilakiyam Ettuthogai Moolamum Thelivuraiyum, Manivasakar Pathippagam, Chennai, India

Swaminatha Iyer, U.V. (1978) Kurunthogai Moolamum Uraiyum, U.Ve.Sa Noolagam, Chennai, India

Venkatasami Nattar, N.M. (2007) Agananooru, Kalaga Veliyedu, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License